இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 24.09.2026

# தலைதெறிக்க ஓடும் த.வெ.க. வேட்பாளர்கள்!

மதுராந்தகத்திலும், தாராபுரத்திலும் விஜய் நிறுத்திய வேட்பாளர்களை பொதுமக்கள் விரட்டோ விரட்டு என்று விரட்டி அடிக்கிறார்கள். மதுராந்தகத்தில் மரகதம் குமாரவேலும், தாராபுரத்தில் சத்தியபாமாவும் தலைதெறிக்க ஓடிக் கொண்டு இருக்கிறார்கள்.

**இருவருமே அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வென்றவர்கள். அவர்களை தனது சுயநலத்துக்காக, குதிரை பேரம் நடத்தி அக்கட்சி உறுப்பினர்களில் இருந்து விலக வைத்தார் விஜய். அவர்கள் தங்களது எம்.எல்.ஏ. பதவியை விட்டு விலகினார்கள். அந்த இடங்களுக்கு இடைத்தேர்தல் வந்துள்ளது. செய்யப்பட்ட பேரத்தின் அடிப்படையில் அவர்களையே வேட்பாளர்களாக அறிவித்தார் விஜய். இதுதான் அப்பட்டமான, பச்சையான குதிரை பேரம் என்பது. அதைச் செய்துவிட்டுத்தான் வெள்ளையும் சொள்ளையுமாக பட்டு வேட்டி சட்டையுடன் ஊரைச் சுற்றிக் கொண்டு இருக்கிறார் விஜய்.**

ஆனால் அவரால் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டவர்களால் ஊருக்குள் நடமாட முடியவில்லை. வோட்டுக் கேட்டுப் போகமுடியவில்லை. எங்கேபோனாலும்பொதுமக்கள்,வாக்காளப்பெருமக்கள்விரட்டுகிறார்கள். ஊடகங்களில் இந்தக் காட்சிகள் அதிகமாக வரத் தொடங்கி இருக்கின்றன.

**‘துரோகியே வெளியில் போ’ என்று மதுராந்தகத்தில் மரகதம் குமரவேலையும், தாராபுரத்தில் சத்தியபாமாவையும் விரட்டுகிறார்கள் மக்கள்.**

**‘ஊருக்குள் வரத் தடை, துரோகி பட்டம், வேட்பாளர்கள் விரட்டி அடிப்பு, தடுமாறும் தாராபுரம், மல்லுக்கட்டும் மதுராந்தகம், கை கொடுக்குமா விஜய் பிரச்சாரம்?’ என்று தலைப்பு போட்டு இக்காட்சிகளை விவரித்துள்ளது ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ இதழ். ( 25.9.2029)**

“கான்ஃபிடெண்டாக இருங்க என்று விஜய் சொன்னார். இப்போது அவரே சந்தேகத்துடன் தான் இந்த இடைத்தேர்தலை எதிர்கொள்கிறார். அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட அந்த இரண்டு வேட்பாளர்களும் மை காய்வதற்கு முன் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர். மக்களை ஏமாற்றிச் சென்றவர்களே மீண்டும் ஆளும் கட்சி சார்பில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு இருப்பதை தொகுதி மக்களே ரசிக்கவில்லை. த.வெ.க.வில் இருப்பவர்களும் மரகதம் குமாரவேல் நிறுத்தப்பட்டு இருப்பதை ஆதரிக்கவில்லை. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் கட்சி சாராத பொதுமக்களும் மரகதம் மீது கோபத்தில் இருக்கிறார்கள்.

**‘நாம் நம்பி இந்தம்மாவுக்கு வோட்டு போட்டா, இந்தம்மா நம்மளை முட்டாள்னு நினைச்சு விஜய் கட்சிக்கு போயிட்டாங்க. நாம் யாருன்னு இந்தம்மாவுக்கு உணர்த்தணும்’ என்று ஊர் மக்களே கோபத்தை வெளிப்படுத்தி பேசத் தொடங்கி விட்டார்கள் என்று ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ எழுதி இருக்கிறது.**

“தாராபுரம் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமா வேட்புமனுத் தாக்கல் செய்ய வரும் போது, ‘துரோகி.. துரோகி ஒழிக’ என்று பொதுமக்கள் கோஷம் போட்டனர். பல கிராமங்களில் வோட்டுக் கேட்கச் செல்லும் போது ஊருக்குள்ளேயே விடாமல், ‘யாரைக் கேட்டு ராஜினாமா செய்தீர்கள்? மீண்டும் வோட்டுக் கேட்டு வந்துட்டீங்களா? இப்போ உங்களுக்கு வோட்டுப் போட்டா, மறுபடி ராஜினாமா செய்யமாட்டீங்கன்னு எப்படி நம்புறது?’ என்று ஏகத்துக்கும் வாக்காளர்கள் அவரை வறுத்தெடுக்கிறார்கள்” என்றும் எழுதி இருக்கிறது ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ இதழ்.

**“ஓடு, ஓடு, ஓடு! த.வெ.க. வேட்பாளர்களை துரத்தும் மக்கள்’ என்று அட்டைப்படக் கட்டுரை தீட்டி இருக்கிறது ‘நக்கீரன்’ இதழ். ( செப்டம்பர் 23-25)**

“மரகதம் குமரவேல் எங்கு போனாலும் பொதுமக்கள் கேள்வி கேட்டு விரட்டி அடிக்கிறார்கள். தற்போது போலீஸ் பாதுகாப்புடன் தான் அவர் வாக்கு சேகரிக்கும் பரிதாபச் சூழலில் இருக்கிறார். தாராபுரத்தில் சத்தியபாமா எந்தப் பக்கம் போனாலும், ‘அந்தப் பக்கம் போயிடாதீங்க’ என்று த.வெ.க.வினரே சொல்கிறார்கள். வெறுவேடம்பாளையம் கிராமத்துக்கு வந்தபோது, ‘ஒழுங்கா போயிடு’ என்று அவரது முகத்துக்கு நேராக பொதுமக்கள் சொன்னார்கள். பி.ஏ.பி.வாய்க்கால் மூலம் உப்பாறு அணைக்குத் தண்ணீர் கொண்டு வருவதை சத்தியபாமா தலையிட்டு நிறுத்தியதாக அவருக்கு கடும் எதிர்ப்பு நிலவுகிறது. இது போன்ற எதிர்ப்பால் பாதியிலேயே திரும்பினார். ‘ஏதோ ஒரு ஆர்வத்தில் நடிகர் விஜய்க்கு வோட்டுப் போட்டு விட்டோம். அது தவறு என்று இப்போது உணர்கிறோம்’ என்று பொதுமக்கள் வேதனை தெரிவித்து வருகிறார்கள்” என்று எழுதி இருக்கிறது ‘நக்கீரன்’.

**மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு அச்சரப்பாக்கம் வடக்குப் பகுதியில் பரப்புரை செய்யப் போனார் அமைச்சர் ஆனந்த். அவரால் பாதித்தூரம் கூட போகமுடியவில்லை. பொதுமக்கள் மறித்தார்கள். பாதியிலேயே திரும்பி விட்டார். ஏனென்றால் மக்கள் கேட்ட கேள்வி அப்படி. ‘பணத்துக்காக கட்சி மாறிச் சென்று விட்டு மறுபடியும் வோட்டுக் கேட்க வருவது என்ன நியாயம்?’ என்று கேட்டார்கள் மக்கள். புஸ்சி ஆனந்தால் என்ன சொல்ல முடியும்? ‘கிராமத்தை விட்டு துரோகியே வெளியேறு’ என்று முழக்கம் எழுப்பினார்கள் மக்கள். எதிர்ப்பை தாக்குப் பிடிக்க முடியாமல் அமைச்சர் ஆனந்த் வெளியேறி விட்டார். பொதுமக்களுக்கும் போலீஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.**

பல இடங்களில் த.வெ.க. வேட்பாளருக்கு எதிராகக் கருப்புக் கொடி காட்டிக் கொண்டிருக்கிறார்கள் பொதுமக்கள். போலீஸ் பாதுகாப்பு இல்லை என்றால் ஊருக்குள் போக முடியாது என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. தாராபுரம் சத்தியபாமாவுக்கு மட்டும் 60 போலீஸார் உடன் செல்கிறார்கள். சத்தியபாமா அ.தி.மு.க. வேட்பாளராக தாராபுரத்தில் நின்ற போது கொடுத்த துண்டுப் பிரசுரத்தை இப்போது எடுத்து அதில் சுண்டல் கட்டித் தந்து கொண்டு இருக்கிறார்கள். ‘நன்றி சொல்லக் கூட வராத நீங்கள் இப்போது வாக்குக் கேட்டு மட்டும் ஏன் வருகிறீர்கள்?’ என்று மரகதம் குமரவேல் முகத்துக்கு நேராகவே மக்கள் கேட்கிறார்கள்.

**இந்த எதிர்ப்பை சமாளிக்க வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்கத் தொடங்கி இருக்கிறார் மதுராந்தகம் வேட்பாளர் மரகதம் குமரவேல். இவை வீடியோக்களாக ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.**

**மதுராந்தகத்திலும் தாராபுரத்திலும் த.வெ.க.வுக்கு உண்மையான நிலைமை இதுதான். இது ஏதோ மரகதம் குமரவேல், சத்தியபாமாவுக்கு ஏற்பட்ட கதி அல்ல. விஜய் கதி இதுதான். விஜய் சாயம் வெளுக்கத் தொடங்கி இருக்கும் காட்சிகள் இவை.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்த கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் – திருமதி சாந்தகுமாரி ஆகியோர் தமது பேத்தி – டாக்டர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. – சங்கீதா ஆகியோரின் மகள் செந்தாமரை – தீபக் ரவி ஆகியோரின் மணவிழா அழைப்பிதழை வழங்கினார். திருமதி. துர்கா ஸ்டாலின் மற்றும் மணமகனின் பெற்றோர் ரவிக்கண்ணன், திருமதி தீபா கண்ணன் ஆகியோர் உடன் உள்ளனர்.

### ஜோசப் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு மீது

# தேசிய பழங்குடியினர் ஆணையத் தலைவர் கடும் அதிருப்தி!

## கூட்டத்தில் தமிழக அதிகாரிகள் பங்கேற்காததால் வெளிநடப்பு!

சென்னை, செப்.24-

தேசிய பழங்குடியினர் ஆணையத்தின் (NCST) தலைவர் அந்தர் சிங் ஆர்யா, தலைமைச் செயலாளர் சி. சாய் குமார் மற்றும் வன, வருவாய், சுகாதாரத் துறை செயலாளர்கள் செவ்வாயன்று சென்னைக்கு வராததால், பழங்குடியினர் தொடர்பான பிரச்சினைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை பாதியிலேயே முடித்துக்கொண்டார். இதனால் த.வெ.க. அரசு மீது கடும் அதிருப்தியை அவர் வெளிப்படுத்தினார். நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு அரசு விருந்தினர் மாளிகையில் தொடங்கிய கூட்டத்தில், ஆர்யா தலைமையிலான 12 பேர் கொண்ட என்.சி.எஸ்.டி. பிரதிநிதிகள் குழு கலந்துகொண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பழங்குடியினர் பிரச்சினைகளைக் கையாளும் முக்கியத் துறைகளின் தலைமைச் செயலாளர் மற்றும் மூத்த அதிகாரிகள் வராதது குறித்து பிரதிநிதிகள் குழு அதிருப்தி தெரிவித்ததை அடுத்து, கூட்டம் 20 நிமிடங்களுக்குள் முடிவடைந்ததாக ஓர் வட்டாரம் தெரிவித்தது.

பழங்குடியினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அதற்கான செயல் திட்டத்தை வகுப்பதற்காகவே செவ்வாய்க்கிழமை கூட்டம் நடத்தப்பட்டதாக பிரதிநிதிகள் குழுவின் உறுப்பினர் ஒருவர் கூறினார். சமூக நீதித் துறை செயலாளர் பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளின் செயலாளர்கள் மற்றும் தமிழகத்தின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஆகியோர் இக்கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்டனர்.

நிகழ்விடத்தில் இருந்த அரசுப் பிரதிநிதிகளைத் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுமாறு ஆர்யா கேட்டுக் கொண்டார். தலைமைச் செயலாளரும், வனம், சுகாதாரம் மற்றும் வருவாய்த் துறைகளின் செயலாளர்களும் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டதும், ஆர்யா, NCST உறுப்பினர்களான ஆஷா லக்ரா மற்றும் ஜதோத்து ஹூசைன் ஆகியோருடன் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டம், NCSTயின் இரண்டு நாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகும். திங்களன்று, இந்தக் குழுவினர் வேலூர், திருப்பத்தூர், நீலகிரி, கிருஷ்ணகிரி, தேனி மற்றும் தென் மாவட்டங்கள் உட்பட மாநிலம் முழுவதிலுமிருந்து வந்த பழங்குடியினர் பிரதிநிதிகளைச் சந்தித்தனர். அவர்களில் பெரும்பாலானோர் நிலம் தொடர்பான பிரச்சினைகள், வன உரிமைச் சட்டத்தை (FRA) அமல்படுத்துதல் மற்றும் வனத்துறையுடனான முரண்பாடுகள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டினர்.

அரசு அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்காதது குறித்து அதிருப்தி தெரிவித்த ஆணையத்தில் உறுப்பினர்களில் ஒருவர் “என்னதான் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவிகிதம் தான் மலைவாழ் மக்கள் இருந்தாலும்,அரசாங்கம் இப்படி ஒரு முக்கியமான கூட்டத்தில் பங்கேற்காமல் இருந்திருக்கக் கூடாது” என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார்.

அத்துடன் அக்குழுவின் சேர்மனுடன் வந்திருந்த ஒருவர்,’தேசிய பழங்குடி ஆணையத் தலைவர் தமிழக அரசு மீது மிகவும் அதிருப்தி தெரிவித்தார்’ என்று குறிப்பிட்டார்.

### அரியலூரில் மாவட்ட தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினர் சார்பில்

# ஒன்றிய பா.ஜ.க. - த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

அரியலூர்,செப்.24-

அரியலூர் மாவட்டம் அரியலூர் அண்ணாசிலை அருகில் அகில இந்திய தொழிலாளர் முன்னேற்ற சங்க அறிவிப்பிற்கிணங்க மக்கள் விரோத, தொழிளார் விரோத, விவசாயிகள் விரோத, ஜனநாயக விரோத பா.ஜ.க., மற்றும் தமிழக த.வெ.க. அரசை கண்டித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அரியலூர் மாவட்ட தொ.மு.ச. தலைவர் ரெ.மகேந்திரன் தலைமை வகித்தார், முன்னதாக அரியலூர் மாவட்ட தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன் அனைவரையும் வரவேற்றார். அரியலூர் மாவட்ட தொமுச துணைத் தலைவர், பி.அய்யாதுரை, மத்திய சங்க தலைவர் டி.சேகர், அரியலூர் மாவட்ட தொ.மு.ச. துணை செயலாளர் ஆர். சங்கர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் திருச்சி பாய்லர் தொழிற்சாலை பொதுச் செயலாளர் தீபன் கீழ்க்கண்ட தீர்மானங்களை விளக்கி கண்டன உரையாற்றி பேசியதாவது ஒன்றிய பாஜக மற்றும் தமிழக தவெக அரசும் தமிழக மக்களை வஞ்சிக்கின்ற மாதிரி செயல்படும் நடவடிக்கைகள் என்னவென்றால் அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையில் உற்பத்தியாகும் சிமெண்ட்டை உள்ளாட்சித் துறை மற்றும் பொதுப்பணித் துறை கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிய அரசாணை வழங்க வேண்டும், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும். மின்சார சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும். மின்சாரத் துறையில் தனியாருக்கு வழங்கப்படும் பணிகளை நிறுத்த வேண்டும். ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தையும் கைவிட வேண்டும். விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, விளைப் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க வேண்டும். விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும். தொழிலா ளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும். சேலம் உருக்காலையை தனியார் வசம் ஒப்படைக்கும் நடவடிக்கையை கைவிட்டு, அதை மீண்டும் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும், என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி பேசினர். ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் நகர செயலாளர் இரா. முருகேசன், நகராட்சி துணைத் தலைவர் கலியமூர்த்தி, தலைமை கழக பேச்சாளர்கள் கவிஞர் வீரமுரசு, பழ.புனிதம், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் ஜெயகுமார், தொமுச நிர்வாகிகள் எம்.கனகராஜ், க.இளங்கோவன், பி சித்திரவேல், எம் ரமேஷ், உ.தன்ராஜ், எம் கம்பர், பி வில்வேந்திரன், கொளஞ்சி, செல்வம், பி சுப்பிரமணியன், நடராஜ், ஆர்.முத்தையன், சுப்பிரமணியன், ஜெய்சங்கர், ஆர்.குமார், ஆர்.கணேசன், ஆர்.ராஜதுரை, எம்.அன்பழகன், இளங்கோவன், ராஜேந்திரன், சி.கருப்பையா, ஹபீப் ரஹ்மான், துரைராஜன், இளவரசன், கோவிந்தராஜ், பி.அய்யாதுரை, ஆர் ராமகிருஷ்ணன், பழனியப்பன், கே.கருணாநிதி, ஆர். சீனிவாசன், விஜயகுமார், விஜயராகவன்,பூபதி சரவணன்,மகிழ்ச்சி மணி, ஹரி, கதிர், இளம்பரிதி, கிருஷ்ணன், பெரியசாமி, மணிகண்டன் , ஜெகன், ஆண்டவர் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மத்திய, மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத போக்கை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர் முடிவில் அரியலூர் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் பொருளாளர் இரா .திருஞான சம்பந்தம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.



தாராபுரம் நகர கழக துணை செயலாளர் வெ.கமலக்கண்ணன் ஏற்பாட்டில் த.வெ.க.வைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழக முதன்மை செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள் ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் முன்னாள் அமைச்சர்கள் ராஜகண்ணப்பன், என்.கயல்விழி செல்வராஜ், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், நகர்மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன், வழக்கறிஞர் செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.